உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருப்புலீச்சரம்

# ஸ்ரீ யௌவநேச நமகம்.

காரைக்குடி

ராம. சொ. சொக்கலிங்க செட்டியார்

அவர்கள்

இயற்றியது

காரைக்குடி

மெ. ப. பழனியப்ப செட்டியார் அவர்களால்

மன்னார்குடி

பாரதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

1921.

காரைக்குடிச்
செந்தமிழ்க் கழகம்.

நூல். ௧

# திருப்புலீச்சரம்

# ஸ்ரீ யௌவநேச நமகம்.

விலை: அணா ௪.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருப்புலீச்சரம்
# ஸ்ரீ யௌவநேச நமகம்.

காரைக்குடி

ராம. சொ. சொக்கலிங்க செட்டியார்

அவர்கள்

இயற்றியது

காரைக்குடி

மெ. ப. பழனியப்ப செட்டியார் அவர்களால்

மன்னார்குடி

பாரதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

1921.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முகவுரை

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் முக்கிய நகரங்களுள் ஒன்றாகிய காரைக்குடியில், செந்தமிழ்க்கழகம் என்னும் பெயரிய சங்கமொன்று ஸ்தாபிக்கப்பெற்று நடையுறுகின்றது. தமிழ் மொழியினைப் பல்லாற்றானும் வளர்க்க முன்வந்துள்ள இக்கழகம், இதுகாறும் வெளிவராத செந்தமிழ் நூல்களை அச்சிற்குக் கொண்டுவருவதோடு நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பல சாஸ்திரங்களையும் தமிழ்ப்படுத்துவதைத் தனது முதற்கடமையாக மேற்கொண்டுள்ளது.

இக்கழகப் பிரசுரங்களுள் முதன்மையாக வந்த இந்நூல், இவ்வூர் நகரத்தார்களுளொருவரும் செந்தமிழ்ப்புலமை சான்றவரும் சிவபக்த சிகாமணியுமாகிய ஸ்ரீமான் ராம. சொ. சொக்கலிங்க செட்டியார் அவர்களால், எனது விருப்பத்திற்கிணங்க எங்கள் குடும்பத்திற்கு அபிமான க்ஷேத்திரமாகிய சிதம்பரம் திருப்புலீச்சரத்தில் திருக்கோயில்கொண்டமரும் ஸ்ரீ யௌவநேசர்மீது நமகமாக அன்பு பாராட்டி வரையப்பெற்ற அருமைவாய்ந்தது. ஸ்ரீ வியாக்கிரபாதரின் ஆன்மார்த்த பூஜாமூர்த்தியான ஸ்ரீ யௌவநேசர் திருநீலகண்ட நாயனாருக்கும் கணம்புல்ல நாயனாருக்கும் திருவருள் புரிந்த பெருமையை யுன்னி யுன்னி யுவந்துளங் கனிந்த எங்கள் குடும்பத்திற் பெரியோர்கள் பக்திவலைப்

பட்டவராய் அம்மூர்த்தியின் றிருக்கோயிற் றிருப்பணியை மேற்கொண்டதுமன்றி அம்மூர்த்திக்கு நித்திய நைமித்திகங்கள் ஒரு சிறிதும் வழுவுதலன்றி நடைபெறுமாறு வேண்டிய ஏற்பாடுகளும் அமைத்தனர். இன்னோரன்ன சிறப்பு வாய்ந்த ஸ்ரீ மௌனநேசர்மீது நமகமியற்றி உபகரித்த ஸ்ரீமான் செட்டியார் அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

இச்செந்தமிழ்க் கழகம் மேன்மேலும் அபிவிருத்தியடைந்து தான் கொண்ட நற்றொழிலை இனிது நிறைவேற்றவும் நமது நாடெங்கும் தமிழ் மணங்கமழவும் தமிழபிமானிகளாகிய நகரத்தாரனைவரும் இதனை நன்குபாராட்டி இனிது வளர்த்தருள்வாராக. இன்னும் இத்தகைய நன்முயற்சியில் என்னை ஊக்கியருள எல்லாம் வல்ல மௌனநாதனை எப்பொழுதும் மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

காரைக்குடி,<br>
துன்மதி௵<br>
ஆடி௴ ௫௨

மே. நா. சித. நாகப்பசெட்டி<br>
காரியதரிசி,<br>
காரைக்குடிச் செந்தமிழ்க் கழகம்.

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| ௫ | ௨௫ | மகிழ்நிர் | மகிழ்நிற் |
| ,, | ௨௮ | சகழு | சகமு |
| ௰ | ௫ | வ°°தென | வ°°தென் |
| ,, | ௰௭ | ரொன்ன | ரொன்ன் |
| ௰௫ | ௰௪ | தேசர் | தேசர்த் |
| ௨௯ | ௨௰ | கண்டா | கண்டர் |

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருப்புலீச்சரம்

# ஸ்ரீ யௌவநேச நமகம்.

## காப்பு.

### விநாயகர் துதி

கட்டளைக்கலித்துறை

திருவுடை யந்தண ராகங்கக் கூத்தனைச் சேர்ந்தருச்சித்
தருளுறச் செய்புலி யான்மார்த்த நாயக னைப்பரவுங்
தெருள்விடை யான்யௌவ நேச நமகந் திருவடிக்கண்
மருவுநற் பேறு தருந்தில்லைக் கற்பக மாதங்கமே. க

### வியாக்கிரபாதர் துதி

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சீரார் புலிக்கான் முனிவரநீ
சிவா ஆர்ச் சனைக்கா மலர்கொய்யு
நாரார் திருத்தொண் டரிதுணர்த்தி
நம்ப னருள்பெற் றின்புறுதி
தாரா ரிதழி முடியவனைத்
தமியேன் றுதித்தின் புறற்குரிய
வாரா நிறைபே ரன்பறிவோர்ப்
பருளா யதுநின் னியல்பாமே. உ

### பதஞ்சலியார் துதி

அரிய குருசொற் படிகயிலை
யணிநோற் றயனு யரன்மறுத்து
முரிய நிலைநின் றருளினிற்பூ
வுலகிற் றிகழ்பன் றணைந்துபுலிச்

சரணர் சார்பிற் புலீச்சரமுந்
தாழ்ந்தங் கமர்ந்தா னந்தநடந்
தரிசித் தெமக்குங் காட்டுபதஞ்
சலியார் சரணந் தலைக்கொள்வாம். ௩

திருநீலகண்ட நாயனார்துதி

நீல கண்டத் துறுமன்பே
நிலவு முருவா யுலகுய்ய
நீல கண்ட வபிதான
நிகழப் போந்தன் பெனுமுதுமை
நீல கண்டன் றருமிளமை
நிலைமை யென்று நிகழ்மணியே
நீல கண்ட னடிக்கன்பே
நீச னேற்கின் கருளுதியோ. ௪

கணம்புல்ல நாயனார் துதி

விளக்கன் புடனிட் டார்பேறு
மெய்ம்மை ஞான மெனும்வாய்மை
விளக்கிக் கணம்புல் லளவெனினும்
மிகுபே ரன்பி னொளிபெருக
விளக்கிட் டருள்சார் புலீச்சரத்தெம்
விமலற் றுதித்துய்ந் திடவுளத்தை
விளக்கி யருளாய் கணம்புல்ல
விசிட்ட நாம மிளிர்மணியே. ௫

திருத்தொண்டர் துதி

சரியை யாதி தீக்கைமுறை
தந்தா சிரிக்கு மாசிரியப்
பெரிய ரானாய்க் குநருய்யப்
பிறங்க நேர்கண் டுலகனைத்துஞ்
சரியை யாதி சைவநெறி
சார்ந்துய்ந் திடப்பூ மியில்வந்த
பெரியர் தொண்டத் தொகையடியார்
பிரச மலர்மென் கழல்பணிவாம். ௬

## நூல்.

திருப்பு லீச சிவைநேச
திவிய தேச சிதாகாச
பருப்ப தேச பவநாச
பாச மோச பரகேச
கருப்பு கார்சொல் சிற்சபேச
கருப வாச கரதேசத்
தருப்பு ஞான கோசகயி
லாச யௌவ் நேசநம. ௧

புலிக்கான் முனிவ னன்மார்த்த
பூசா மூர்த்தி யாயமர்ந்த
நிலைக்காங் கவற்கே யருளுதலா
நிகில சீவ ருந்தொழுதுய்
தலைக்காண் பரார்த்த லிங்கமுமாய்ச்
சார்பே கருணைக் கிபைபெனச்சார்
மலைக்கார் முகநின் னடிக்கன்பே
வழங்கா யௌவ நேசநம. ௨

புண்ட ரீக மாவடிவன்
புண்ட ரீக மாவடியாக்
கொண்டு மலர்கொய் தன்பொன்றே
குறித்த முனிசெய் பூசனைநேர்
கண்டு மகிழ்நிர் கன்பின்றிக்
கடையேன் புரிபூ சனையென்னுந்
துண்ட மதியோ டகியேற்ற
சூட யௌவ நேசநம. ௩

தந்தை மத்தி யந்தினரிச்
சகமுய்ந் திடச்செய் தவப்பயனும்
வந்த பொழுதே மறைமுதனால்
வழங்க வுணர்ந்து தவமுணர்ந்தென்

றிந்த மொழிசை சவத்தியம்பி
யினிய வருண்மாண் புணர்த்துமழ
மைந்த முனிக்கா ரருள்வழங்கும்
வரத யௌவ நேசநம. ௪

வேத முணர்த்திச் சிவாகமமும்
விமல தீக்கை புரிந்தளித்த
தாதை யினிவேண் டுவதென்னெனத்
தகைசா றவங்கேட் டருச்சனைமே
லாத லுணர்த்த வதுபுரிமே
லாய தலங்கேட் டடைந்தமழ
மாத வனுக்கா ரருள்புரிந்த
மணியே யௌவ நேசநம. ௫

சிவபூ சனையின் றருந்தவங்கள்
செயினுஞ் சுவர்க்கா தியபோக
மவையே யலது சிவகதியின்
றமல மோக்கம் பூசனையே
செவிசேர்த் தருண்மென் ருரைமொழி
சிரமேற் கொடுபோந் தருச்சனையிப்
புவிவாழ் வுறச்செய் புலிக்களித்த
புராண யௌவ நேசநம. ௬

அவனி முழுதுஞ் சிவசந்நிதி
யாக்காண் பதுசி ரஃதன்மை
தவமில் குறையே யெனினுமுயிர்
சார்மெய்ம் முழுது நிறைந்துறினுந்
திவண்முக் கியநன் னிலையுளபோற்
சிவபி ராற்குண் டெனத்தாதை
நவிறல் வினுய்ச்சார் புலிப்பாத
நாத யௌவ நேசநம. ௭

புவியி லேஜை யெண்கண்டம்
போக மலதோ ரறமிலையா
னவிலும் பாத கண்டமதே
நலஞ்செய் துயும்பூ தலமென்று
புவனி யிற்போ யெனுஞ்சுருதி*
புகன்றுங் குரைத்த தந்தைமொழி
செவிகொண் டடைந்த முனிக்கருண்மா
தேவ யௌவ நேசநம. அ

ஞாலத் தலகில் சிவதலங்க
ணண்ணு மவற்று ளல்வேத
மேலத் தகர வித்தையென
விசைக்குஞ் சுழுனைத் தலந்தில்லை
மூலக் கொழுந்தைப் பூசியென்
முழுநீ றணிந்து விடுப்பவருஞ்
சீலத் தவமா முனிக்களித்த
தேவ யௌவ நேசநம. கூ

அரிய நெறிகள் கடந்தேகி
யருள்கூர் சிவகங் கையின்மூழ்கி
விரைமென் கமலத் தருச்சித்து
மேல்பால் வந்திங் கிதுவேநா
மருவற் கினிய தெனவமர்ந்தான்
மார்த்த மாகிற் றுபித்துப்
புரிபூ சனைசெய் புலிக்கருளும்
புனித யௌவ நேசநம. ய

வாவி மலர்ப்பூம் பொழி றாய்மை
வளஞ்சா லிதுவே நாமென்று
மேவு மிடமென் றமர்முனிவன்
விடியி லளிசார்ந் துணுமுன்மல

* திருவாசகம்.

ராவ தெரியா தருவமுக்கு
மண்ணுல் புலிக்கால் கரங்கணனி
தாவென் றவைவேண் டன்பருளெந்
தாயே யௌவ நேசநம. ௰க

பெறுதற் கரிய மானிடமெய்
பெற்றுங் கரங்கால் விலங்குவடி
வுறுதற் கிறைஞ்சிப் பெற்றதுமெய்
யுழுவ லன்பா மொளியுருவங்
கறையற் றிலகப் பெற்றுளவக்
கவிஞ லன்றோ மழமுனிவன்
நிறையற் பெளியேற் கருளாயோ
நிமல யௌவ நேசநம. ௰உ

இனிய பரார்த்த மான்மார்த்த
மின்றி யியற்ற லடாதென்னும்
புனித நூல்வா யுணர்த்துதற்கோ
புலிக்கான் முனிநிற் புலீச்சரத்துத்
தனது பூசை புரீஇமூலத்
தான சுயம்பு பூசனையுந்
தினமு நியமத் தாற்றினர்மா
தேவே யௌவ நேசநம. ௰௩

புலிக்கால் கரங்க ளயந்துபெறு
புதல்வற் பார்த்து மகிழ்தாதை
குலக்கோர் மைந்த மனையறநீ
கோடி யெனவோர்த் துடன்வசிட்டர்
கலத்தார் பின்னி மணம்புணர்ப்ப
நண்ணி வாழ்புண் டரிகபத
வலத்தா பதற்கா ரருள்புரிந்த
வள்ளால் யௌவ நேசநம. ௰௪

ஏனை மூவர்க் காதரவா
யின்றி யமையா மனையறத்தின்
மான வாழ்நா ளுபமனிய
மைந்தன் வசிட்டர் மனைப்பருகு
மான பால்வேட் டழவினியஃ
தருந்தா தருளுநண் டெய்கெனநின்
பானன் றுய்த்த புலிக்கருளும்
பரம யௌவ நேசநம. ௰௫

அன்னை முலைப்பா லினியருந்தா
தருட்பாற் கடன்மன் றகஞ்செலுப
மன்னி யனுக்குத் தந்தைமகிழ்
வானாட் டதுவே வான்றீக்கை
யென்ன மேற்கொண் டடிமுடிக்கொண்
டிறைஞ்சு கண்ணா ரிலைக்கிசையப்
பின்ன ரருளம் முனியைமகிழ்
பெரும யௌவ நேசநம. ௰௬

வசிட்டர் தேனுப் பான்மேல
வாவே தரவிற் பவக்கேதந்
நசைக்கொன் றருட்பா லுண்டுபவ
நலிபே ரின்பார் கெனத்திருமுன்
பசைக்கொண் டுய்த்த தாதையைப்போல்
பவர்சே யாகப் பணித்தியெனை
மிசைக்கும் * பிறப்பி லினிப்புகுத்தின்
விமல யௌவ நேசநம. ௰௭

கருமம் பிரம மெனுங்கரிசே
கடவு ளெமன் பவரலரிவ்
வருநோன் புறுவ ரெனத்திருத்தி
யவர்க்கு முணங்காட் டருணடனம்

---

* மிசைத்தல் — உண்பித்தல்; அது ஈண்டு வினைப் போக மனுபவித்தல்.

விரவு முளங்கோன் றலுமீண்டு
மிளிரத் தினங்கண் டியவருண்மோ
வரனென் றவாவி யமர்புலிநா
யகனே யௌவ நேசநம. ௰௮

அத்தன் பொதுப்பேர் சிதம்பரமன்
றமலங் கமலஞ் சிவாலயமெய்
சத்தும் பரம்பொன் மயகோசஞ்
சத்தி சபையற் புதமகத்துச்
சுத்தம் பிரம முத்திகுகை
சுழுனை ஞான சுகந்தனிமுன்
முத்தி யருள்பேர் வழுத்துபுலி
முதல்வ யௌவ நேசநம. ௰௯

அருமா மறைமன் றுதியவா
யலகி லுமை மெடுத்தோதும்
பெருமான் பதஞ லித்தலத்தெம்
பெருமா னடங்காண் பதுதிண்ண
மொருவா நின்று முனங்கண்டா
ருறுவ ரெனவோர்ந் துளந்துணிந்தங்
குருகா நிற்கும் புலியுளத்தி
னொருவா யௌவ நேசநம. ௨௰

அருளே துணையாப் பிலநின்று
மரவோர் வரவோர்ந் தன்புமிகூஉப்
பெருமா னடங்கண் டாங்கின்பப்
பெருவா ரிதிதோய்ந் தவ்வரவைத்
தருமூ லட்டா னத்துடனிற்
சார்ந்து திருமுன் பணிவித்தாங்
கொருவா தம்பும் புலிப்பாத
னுளத்தா யௌவ நேசநம. ௨௧

தாரு வனத்து முனிவர்விடச்
　　　　சாரு வனத்துப் புலிபாம்பைத்
தேரு மனத்தி னுடையணியாத்
　　　　திகழக் கொண்டாய் பார்வையினன்
பாரு மனத்துப் புலிபாம்ப
　　　　ரடுத்தூன் னடிமை யாயென்றுஞ்
சாரு மெனக்காட் டௌவுகொலெந்
　　　　தாயே யௌவ நேசநம. ௨௨

புலிய ரொருவர் முன்னையர்மேற்
　　　　புதிய பாம்பர் புகுந்தனரென்
றலகில் விலங்கா திகளிகலற்
　　　　றன்பார் தில்லைப் புலீச்சரவண்
டலனிற் சார்த்தச் சார்ந்தபதஞ்
　　　　சலியார் பலகா லிறைஞ்சவருள்
குலவு யௌவ நேசைமகிழ்
　　　　கொழுந யௌவ நேசநம. ௨௩

அன்பா லுனவன் பதஞ்சலியா
　　　　ரடுத்தாங் கிறைஞ்சு பதஞ்சலியா
ரின்பார் தரவின் னருள்புரிசீ
　　　　ரெவ்வ நாம்பி காநாத
தன்பால் வரினு மரவுனது
　　　　தக்க பணியென் றுடன்சார்த்தி
நன்பார் தரச்செய் புலிப்பாத
　　　　நாத யௌவ நேசநம. ௨௪

ஈச னுணை பதஞ்சலிவந்
　　　　தியம்பி யாங்கந் நடங்காணு
மாசை பெருகக் கணமூழி
　　　　யாகக் கழித்தாங் கமர்ந்தரவோ

டோசை பெருக வாழ்புலிக்கா
ளுறுவர் பாசத் துறுவலைதென
பாச நேசர்க் கொழித்தருளும்
பரம யௌவ னேசநம. உரு

உறங்கு கின்றான் புலியனென
வுரைத்த கிராத லாகவச்சொல்
சிறந்த பொருட்டென் றதிவிரைசெல்
சிங்க னிறைஞ்சி நின்றிடநேர்
திறந்து விழிகள் வந்தனையோ
சிங்க வரும வென்றருள்செய்ந்
நிறைந்த புலிக்கான் முனிநாத
நிமல யௌவ னேசநம. உகு

சுவரா சாங்கம் வேண்டாது
சுத்தாத் துவிதா னந்தநயச்
சிவரா சாங்கம் வாய்ப்புறநேர்
சேர்ந்த சிங்க வருமரென்ன
பவரா சாங்க கற்றிடம்
பரவப் புரிது மெனத்துணிந்த
தவரா சாங்கத்தனிப் புலிக்கோர்
தலைவ யௌவ னேசநம. உஎ

ஆசை யுளதே லுடற்குற்ற
மகனுந் திறந்செய் தவநியனைத்
தேச மிறைஞ்ச வாழ்மகு
திரண மெனநீத் தெமக்கருளு
மீச னெனவந் தடிமுடிக்கொண்
டிறைஞ்சு கவுடே சனையுகந்த
மாசில் புலிமா முனிபோற்றும்
வள்ளால் யௌவ னேசநம. உஅ

இவணீ நிற்றி யென்றுடசத்
திருத்திப் போந்து பதஞ்சலிமா
தவர்பாற் சிங்க வருமனிலே
சாற்றிப் பரிந்திங் கிவண்மன்றிற்
றிவள்வான் பணிக்கா மிறைவனரு
டேர்து மெனமன் றுறுகாலத்
தவரோ டேகும் புலிநினம்போற்
றமல யௌவ னேசநம. 	௨௧

அமல மன்றிற் பதஞ்சலியோ
டடுத்தாங் கண்ணுல் கவுடேச
குமர னணைந்தா னவனுடற்சார்
குற்றங் கடிந்துன் னடக்கோலம்
விமல வருளி யடிமைகொள
வேண்டு மெனவிண் ணப்பநவின்
முமல மகற்று புலிக்கினிய
முதலே யௌவ னேசநம. 	௩௰

சிங்க வருமன் றனைநீவிர்
திகழ்பொற் கமல வாவிசிவ
கங்கை படிவித் தெங்கூத்துக்
காண்பான் முன்கொண் டுறுதிரென
வங்க ணிறைவ னருளிப்பா
டாக வளவி லகமகிழ்ச்சி
யொங்கு மரவு புலிபோற்று
மொருவ யௌவ னேசநம. 	௩௧

அங்க ணருளிப் பாடியரோ
டகன்று சிங்க வன்மவுனக்
கெங்கள் பெருமா னடங்காட்டற்
கிசைந்தான் வருகென் றிசைத்தனைய

மங்க லஞ்செய் பங்கயப்பொன்
வாவி படிகென் றேவியவுத்
துங்க வரவு புலிபணியுந்
தூய யௌவ நேசநம. ௩௨

முனிவர் வாய்மை வாய்மையென
மூழ்கி யெழுவேந் திரணியமா
யினிய மேனி யொளிதிகழ்வுற்
றெழக்கண் டெவரு மதிசயித்தங்
கனைய நிபத்தா லிரணியவன்
மாவென் றழைப்ப வன்புவகை
நனிமிக் குளங்கொள் புலிப்பாதர்
நாத யௌவ நேசநம. ௩௩

அரிய சிவகங் கையின்மூழ்கி
யருக்க னொளியுஞ் சமழ்ப்பவெழும்
பெரிய னிரணி யப்பெயரோன்
பெருமா னடங்காண் புறற்கிதுவே
யுரிய விதியென் றைந்தெழுத்து
மோது சிவதீக் கையினைமுறை
புரியும் புலிக்கான் முனிநாத
புனித யௌவ நேசநம. ௩௪

தீக்கை புரிந்தாங் கிரணியனைச்
செய்ய திருச்சிற் றம்பலமுன்
னூக்கி யமல னடம்புரிய
வவன்கண் டளவாப் பேரன்பு
தேக்கி வாய்ப்போந் தெனத்துதித்துத்
திருமு னிற்ப வுடனின்று
காக்கும் புலிக்கான் முனிகொழுமுக்
கண்ண யௌவ நேசநம. ௩௫

இறைவ னிரணி யனை நோக்கி
யெம்பா லன்பா தூதியுவந்தோ
முறுவ ரிருவர்க் குரியதிரு
வுடையந் தனார்க்கு நமக்குவகை
நிறைகொண் டாற்றி வாழ்கெனவந்
நிமலற் போற்றவ் வரசையழைஇ
முறையி னேகு புலிகினிய
முதல்வ பௌளவ நேசநம. ௩௬

அரிது புறஞ்செ லிரணியனை
யழைத்துக் கொடுபோ யருண்மூலத்
துரிய முதலை யிறைஞ்சிமலர்
தூவிப் பரவப் புரிந்துபுலிச்
சுரர்முன் பணிவித் தநந்தேசர்
தொழுவித் துடனுய்த் தம்முடச
மருவி மகவிற் பேணுபுலி
வரத பௌளவ நேசநம. ௩௭

மனையை நோக்கி யுபமனிய
மகற்குப் பின்னீ பெறுதுபெறு
தனைய னிவன்கைக் கோடியெனத்
தாய்தாண் மலர்வீழ்ந் திறைஞ்சிரணி
யனையவ் வனமே லெடுத்துமகிழ்ந்
தமல னருள்சேய் மணியெனக்கொண்
டினிது களிப்ப வளித்தபுலி
யீச பௌளவ நேசநம. ௩௮

அரசை யுவந்தாங் கருகிருத்தி
யரனெங் கணுமார்ந் திருக்கினுநேர்
தெரிய வரிதால் வீட்டிதாஞ்
சிவர்க் கெனப்பம் றலமமைத்துச்

சுரபி முலைப்பா லெனவிளங்கத்
தோன்றி யருளு மெனும்வாய்மை
யுரைசெய் புலிக்கான் முனிபோற்று
மொருவ யௌவ நேசநம. ௩௯

அறுபத் தெட்டோ டாறுமூன்
றலகி றலங்க டமின்முறையே
யிறைமிக் கிலங்கு தலங்களுள
வீற்றின் மொழிமுத் தலஞான
நெறிமுற் பெறுரும் வீடெளிதி
னிமலன் சருவ மானியமாப்
பெறவைத் தனனென் றருள்செய்புலிப்
பிரிய யௌவ நேசநம. ௪௰

அன்ன தலமா ரூர்காசி
யருண்மன் றவற்றிற் பிறப்பிறப்பாற்
றன்னை நோக்க லான்வீடு
தருமுன் னிரண்டிற் சார்ந்திலநா
மன்னு தில்லை ஞான தல
மலநீத் தொருவீ டெளிதருளு
மென்ன வரசுக் குரைத்தபுலி
யீச யௌவ நேசநம. ௪௧

புவன மெவைக்கும் பெரும்பற்றைப்
புரியும் புலியூர்ப் பொன்மன்ற
மிவர்சச் சிதா னந்தமய
மிதனி லிறைவந் தியனடங்கண்
டுவகை திளைத்தோ முறுவர்பல
ருற்றூர் நீயும் பெற்றுயீண்
டவல மறவென் றருள்புலிக்கோ
ராசே யௌவ நேசநம. ௪௨

தென்ன* ரொளிமன் றகன்றுகதி
தேடிப் புகிற்கா சியினுமிலை
யன்னர்* மணிமன் றறின்மன்ற
வருளுநங் †கோதோ கனமுனையம்
புன்னி விழுதல் கண்ணிமைத்த
லாறுபோ ‡கெனுநேர் கண்டவர்க்கும்
பொன்மன் றருளு முத்தியெனும்
புலிசேர் யௌவ நேசநம. ௪௩

மன்றி னடநேர் காண்பெரியர்
வியங்கு பரிபூ ரணஞானத்
தொன்றி யிரண்டற் றமர்கலவி
யுறுவர் கருதலின் மையினைந்தொழிற்
கென்று நிமரா கார்நிருத்த
வின்ப ரவர்வா ழிடம்பொதுவா
நன்று வேந்தோர் கெனும்புலிக்கோர்
நாத யௌவ நேசநம. ௪௪

சூதன் வியாதன் முதற்பலருந்
தொழுதுய்ந் தனர்வேண் டுபுலியின்
பாதம் பெற்றே முபமனியன்
பால்வேட் டருட்பாற் கடலுண்டான்
மாத வன்பொன் முடியிலடி
வைத்தாங் கிலிங்கம் வழங்கினனிப்
போது **போது மெனும்புலிசேர்
புனித யௌவ நேசநம. ௪௫

---

* தென்னர் — தென்றேசத்தார் * அன்னர் — அவ்வடதேசத்தார் † கோதோகனம் — பசுவிற்பால் கறத்தல் ‡ எனும் — இமைக்குறை ** போதும் — வருவன்.

அனந்த னருளாற் பதஞ்சலியா
யணைந்திங் கெம்மோ டுறவமலன்
முனந்தன் னடமன் றுறவிளக்கி
முதமிக் களித்தான் சாமகர்கோ
னெனுஞ்சை மினிபோந் தின்படட
மிறைஞ்சி வேத பாததவ
னனைந்து துதித்தா னெனும்புலிசேர்
நாத யௌவ நேசநம. சசு

பசையொன் றிலன்றுற் கடனென்றோர்
பாவி தீர்த்தோற் சவமிறைகொண்
டிசைவா ரிதியி னம்பிகவிழ்ந்
திடவீழ்ந் துடன்வீழ்ந் திறந்தவரோ
டசைவில் வீடுற்றன னெனிலிவ்
வணிமன் றமல னருளெவரே
நசையுற் றுரைப்பா ரெனும்புலிக்கோர்
நாத யௌவ நேசநம. சஎ

உலகி லெனைய தீர்த்தமய
லும்ப ரனைய வொளிர்தில்லைச்
சுலவு பிறநீர் மாலயன்முற்
சுரர்போல் வனவண் சிவகங்கை
யிலகு சிவனு முனக்குடனே
யிரித்தோர் ளொளிதந் ததுமோர்தி
குலமன் னவவென் புலிக்கருளெண்
குணத்த யௌவ நேசநம. சஅ

கங்கை யமுனை வாணிமுதற்
கவினீர்க் குலமெ லாம்வணங்குத்
துங்க சிவகங் கையையிஃதோர்
தோய மெனவுன் னேலமல

ணங்க ணருளை யாமிதிலா
ரைய மில்லைசத் தியமென்று
செங்கை யெடுத்தோ தும்புலிசேர்
தேவ யௌவ நேசநம. ௪௯

தூய நடனத் திருமேனித்
தோற்றப் பொலிவு நங்கருத்தின்
மேய வாநந் தழுமத்து
விதமா விளக்கி யகம்புறமின்
றூய வருளு நமக்களித்த
வருமை யார்பெற் றுரென்று
வாய்மை தெளித்த புலிக்கருளும்
வள்ளால் யௌவ நேசநம. ௫௰

மேலுந் தில்லை மான்மியஞ்சொல்
விமல சூதவற் பணிஇவிழிநீர்
காலும் படிநின் றன்புருவாய்க்
கனிதண் புனித னிரணியப்பேர்ச்.
சீலன் றினமுஞ் சிவகங்கா
தீர்த்தம் படிந்து சிவநியமப்
பாலின் புறச்செய் திறைஞ்சவருள்
பரம யௌவ நேசநம. ௫௧

சென்னி மனங்கண் சூதவனடி
திகழ வைத்தோர் பொருளாக்கொண்
டென்னை விளக்கிற் றுன்கருணை
யென்று நிழல்போ லுடன்சார்ந்து
பன்னு மநந்தற் பணிந்துதினம்
பணிக ளவர்க்காற் றுபுவாழு
மன்ன னிரணி யனுக்கருளும்
வள்ளால் யௌவ நேசநம. ௫௨

கவுட மனுவாந் தந்தையுயிர்
கழிந்த பின்சொற் படிவசிட்ட
னிவனைய் துவமேதோர் புலிசொலச்சென்
றிறைஞ்சி யாசி யின்மையுணர்ந்
தவனைந் தையின்மேருள் வாழிகொலென்
ருர்வம் விளக்கி நிலங்கிழிப்போர்ந்
துவகை தளர்மன் னவன்பணிகொ
ளொருவ யௌவ நேசநம. ருரு

மன்னன் மைந்த னிரணியனு
வகையின் றயர்த லோர்ந்துகளாத்
துன்னு நிழல்வா ழீசன்பாற்
றுயர்தீர்ந் திருக்கும் வசிட்டமுனி
முன்னர் வரச்சென் றரவினுடன்
முகமன் பெருகக் கலந்தமர்ந்தாங்
கின்ன லறத்தேற் றுறுபுலிசே
ரெந்தா யௌவ நேசநம. ருசா

மூவ ரவண்விற் றிருந்ததன்பின்
முன்வந் திறைஞ்சு மிரணியனை
யாவென் னுரைத்து முடிந்ததிஃ
தயர்த லொழிக மைந்தநீ
சாவு பிறப்பு மாலயன்முற்
சகல வுயிர்க்கு முண்டெனத்தேற்
றேவில் புலிக்கான் முனிபோற்று
மொருவ யௌவ நேசநம. ருரு

வாடை யொதுக்கு சருகுகளை
மறித்துப் பிரிக்குஞ் சூறையென
வூடு மனைமைந் தரையுறவை
யொருங்கு கூட்ட மெல்வினைபின்

ஞேடும் வகைவல் வினைபிரிக்கு
மொழிதி யருளி லாரினஞர்
கூட லெனத்தேற் றெண்புலிமேசர்
கோவே யௌவ நேசநம. ௫௬

இருவீ ரருளா லிவன்பொனுரு
வெய்தி யுய்ந்தான் யாமுய்ந்தோ
மொருவா துலகுய்ந் தனசுரரு
முய்ந்தா ரெனில்யா ருரைப்பவர்நும்
பெருமாண் பெனுமா வசிட்டரையப்
பேணு சிவகங் கையிற்படிவித்
தருண்மா நடச்சி ருணர்த்துபுலிக்
காசே யௌவ நேசநம. ௫௭

திருத்த னிருத்தங் கண்டிறைஞ்சித்
திருமூ லட்டா னம்போற்றி
யருத்தி யுறநிற் பணிவசிட்ட
ரருந்து விருந்து புரிந்தவர்பின்
விரித்த பணிபோற் றநந்தேசர்
விரைத்தாள் பரவி மேவுறவாங்
கிருத்தி யுடன்சார் புலிபோற்று
மீச யௌவ நேசநம. ௫௮

செய்வ நியதி வழிநாள்வை
திகவேந் தென்னும் வசிட்டருடன்
சைவ வேந்தும் பணிவேந்துந்
தகமுன் முடித்தாங் கொருங்குறக்கண்
டவ்வை திகசை வப்பெரிய
ரடிதாழ்ந் திறைஞ்சு மப்புலிவேந்
தைய்வ தாறுசி ரிரணியன்போற்
றொருவ யௌவ நேசநம. ௫௯

இறைஞ்சு மிரணி யன்னடிகே
ளெந்தை மார்நீர் மைந்தனியான்
மறந்து முனர்சார் கிலன்வீடு
வாய்க்கப் பெறுவ னெனத்தாதை
சிறந்த மகற்கு முடிசூட்டித்
திருந்த நடத்து கென்றிறந்த
திறந்தந் துரைத்த வசிட்டர்பணி
தேவே யௌவ நேசநம. கூ0

மனுசொற் படியிவ் விரணியப்பேர்
மைந்தற் கொடுபோ தரவந்தா
மெனவவ் வசிட்ட ரினிச்செயலென்
னென்னுங் குறிப்போர் தரநோக்கிப்
பினரு மிறையின் மகற்குநீ
பேசுன் கருத்துக் கிசைந்ததைநே
ரனக வேந்தென் றருள்புவிசே
ரசே யௌவ நேசநம. கூக

கூரவ ணுணெ சென்னிமனங்
கொண்டிவ் வரசோ சித்திகண்மேற்
சுரர்தம் வாழ்வு முதலனைத்துந்
துச்ச மெனவே துணிந்தனனும்
பரவு திருத்தொண் டாற்றுபின்
படர்வே பெருவாழ் வெனக்கொண்டே
னருள்க வெனும்மவ் விரணியன்போற்
றண்ணல் யௌவ நேசநம. கூ௨

மைந்த கேண்மோ நின்கருத்து
மாண்பிற் றதற்கே சார்பாக
வந்தண் கவுடஞ் சென்றுநின
தானை விளக்கி மோலியமைச்

சந்து பொருளோ டாறைஞ்ஞூற்
றுறுவர் தமையு மழைத்துடனீ
வந்திங் கமர்க வெனும்புலிசார்
வரத யௌவ நேசநம. கூங

அடிக ளருளிற் றெதுவதுநோன்
பாக்கொண் டேனென் றரசுரைப்ப
நடன்மு னவன்போய் வரவேண்டு
நலம்விண் ணப்பித் தருள்கருணைத்
திடனல் குறப்பெற் றிரணியநீ
செல்க விரைந்து திரும்புகவென்
றுடனன் றுரைத்துய்த் தருள்புலிபோற்
றொருவ யௌவ நேசநம. கூச

குயிற்றும் வினையான் வினையாக்கிக்
கோட லெனுநூற் பொருண்மலநீத்
துயச்செ லிரணி யனைக்கொடஃ
துஞற்றி யுடன்பொற் பணிமன்றிற்
செயற்கு மேவிப் புரிவித்துத்
திகழ்த்து புலிக்கான் முனியுளமாம்
வியற்பொற் றளியீற் றிருந்தருளும்
விமல யௌவ நேசநம. கூரு

இதனை யிதனு லிவன்முடிக்கு
மென்றாய்ந் ததனை யவன்கண்விட
லதனை யுணர்த்தாங் கிரண்மயமன்
றரிய பெரிய பணிக்காற்றன்
முதனை விலன்பொற் பெரியவனை
முடிக்கு மென்றாங் குய்த்தபுலிப்
பதனை யுகந்து பணிகொண்ட
பரம யௌவ நேசநம. கூகூ

மன்ற மிறைஞ்சி வசிட்டருடன்
வரவந் தனைநீ றளிப்பநமந்
தொன்று முளமங் கிருத்துபுசென்
றுழுவை முனிவன் றனையாண்ட
நன்றி புகன்று வழிகழிய
நடந்து விரைந்து தண்கவுடஞ்
சென்ற விரணி யன்போற்று
செல்வ யௌவ நேசநம. கூஎ

நாடு களிப்ப நகர்களிப்ப
நம்பி தம்பி மார்களிப்பக்
கூடு சசிவர் களிப்பமணிக்
கோயில் பொலிய வீற்றிருந்து
நீடு பொருண்முற் பலவள னு
நிறைந்து நோக்கா தாசான்சொற்
பீடு நோக்கு கவுடேசப்
பிரிய யௌவ நேசநம. கூஅ

ஆடல் விளக்கு புலிமுனிபே
ரருளே நினைந்தோர் கணமுகத்தி
னீட லாலிங் கினித்தரியோ
நிறைமன் றடைதும் வரின்வருகென்
பீடு சசிவ ரோர்ந்திறைஞ்சிப்
பிரிவின் றுடன்சார் பெரும்பயணங்
கூட விரைசெ லரசுபணி
கோவே யௌவ நேசநம. கூகூ

அநுச ரமைச்சர் பொருட்குவையோ
டந்தர் வேதி யடுத்தவண்சார்
புனித மறையோர் தமையழைத்துப்
புலியூர் புகுந்தாங் கிறைஞ்சரசு

தனைவாழ்த் துபுழு வாயிரர்நேர்
சார்ந்து *பணிவேந் துடனுவகை
நனிகூர் தருவண் புலிப்பாதர்
நாத யௌவ நேசநம. எ0

கங்கை யமுனை யிடைவசித்த
கவின்மூ வாயி ரவர்தங்க
டங்க டேரி னிழிதலும்புற்
சரண வயன்மேல் வேண்டினுநீ
யெங்க டமையிப் புலியூர்விட்
டேகப் பணியே லெனவேண்டுந்
துங்க மிகுவண் புலீச்சரத்தொண்
சுடரே யௌவ நேசநம. எக

எண்ணிக் காண்போ தொருவரிலா
தினைய வனையன் கவலொழிப்பா
னெண்ணி யிவரி னொருவே
மென்று நபவாக் கெழுமகிழ்ச்சி
நண்ணி மூவா யிரர்ப்பரவி
நமந்து நமக்கு மிறையருட்சீர்
நண்ணிற் றெனவன் புருகரசை
நயக்கும் யௌவ நேசநம. எஉ

வேத சார சிவாகமத்தின்
விதியோர் சிறிதும் வழுவாமற்
போது தோறுந் தனைப்பூசை
புரியன் பினரா தலினடன

* பாம்பு.

நாத னிவரை யுகந்திவரி
ஞானு மொருவ னென்றனென்
றேது வுணர்வே னிறைஞ்சவரு
ளீச யௌவ னேசநம. எ௩

கூறு மூவா யிரர்சூழக்
குலவு மன்றின் குணதிசையிற்
றேறு மரசன் படைவீடு
செய்து பலஞ்சூழ் தரமுன்குடி
யேறி யுடன்கொற் றவன்குடியென்
றேது நாம மிலங்கவமர்ந்
தூறு மன்பாற் றினந்துதிப்ப
வுவக்கும் யௌவ னேசநம. எ௪

அநுசர் கவுட நாடாள்க
வன்ப நீயிந் நாடாள்கென்
றினிது புகன்று மணம்புரிவித்
தெழின்மன் றகத்தோர் மண்டபத்துக்
கனக மோலி முறைகவித்துக்
கவின்புற் கொடியுங் கைக்கொடுத்தவ்
வனக வரசுக் கருள்புலிபோற்
றமல யௌவ னேசநம. எ௫

சைவ நெறியா றைஞ்ஞூற்றந்
தணர்வாழ் திருமா ளிகைநிரைகள்
செய்வ தெவ்வா றெனக்குரவன்
றிருமுன் பணிந்து தெரிந்துபுரிந்
துய்வன் பொருள்க ணிறைத்தவராங்
குறுதா பனஞ்செய் தேவல்புரி
செவ்வி யரசன் றினம்பணிமா
தேவ யௌவ னேசநம. எ௬

காலந் தொறுமச் சிவாகம நூல்
கழறு முறையே பூசனைசெய்
மேலந் தணர்மா ளிகைகடிரு
வீதி திகழ நாப்பணெளி
சாலம் பரமன் றருண்மூலட்
டானஞ் சுரருஞ் சமழ்ப்புறப்பல்
கோலம் பெருகப் புரியரசுட்
குலவு யௌவ நேசநம. எள

மணிமன் றுரிய சிவாகமநூல்
வகுத்த முறைபல் லங்கமெலா
மணிநின் றொளிரப் புரீஇத்தினமு
ஞண்டு வரைசெய் விழாப்பொலிவு
மெணிநன் றியற்றி நிபந்தங்க
ளென்றும் பெருக நிறைத்தெனைய
பணியும் புரியுஞ் சோழேசன்
பரவு யௌவ நேசநம. எஅ

பரவா கமநூற் பூசனையோர்
படித்தா யென்றும் பயின்றியற்றி
வருமா மகுடா கமமுறையின்
வரைசிற் சபாபூ சனைவிதியென்
றொருநூல் புரிந்து பதஞ்சலியா
ருதவ வஃதோர்ந் துறுவர்மகிழ்
தரநேர் பணியு மரசிறைஞ்செந்
தாயே யௌவ நேசநம. எகூ

தரக்கு முனிவர் திருவுடையந்
தணர்முன் ஞேரப் பதஞ்சலியார்
தாக்கொள் பூசா விதிநூலைத் *
தந்தி மேலாய் வலம்வரச்செய்

---

*இந்நூல் சிற்சபா பூஜாவிதானம் என்னும் பெயர்த்து. இதன் விவரத்தைக் கோயிற் புராணத்திற் காண்க.

தருட்சிற் சபையுய்த் தருச்சிப்ப
வணைய முறையா வையுநடத்தி
யருட்பெற் றுய்ந்த வரசுபணி
யரசே யெளவ நேசநம. அ0

ஓடே யெனினும் பற்றறநீத்
துணைப்பற் றினர்கை யுறினதுபொன்
கோடா கோடி யெனுமதனுற்
கொள்ளக் கிடையா தென்றவர்தம்
பீடோர்த் திடவோ சிவவருக்கப்
பெரியர் குயவ ராய்த்தில்லை
மாடே வரச்செய் ததுதெரித்தாய்
வரத யெளவ நேசநம. அக

பொய்ம்மை நெறிமுற் றொழித்தறமே
புரிவார் தூய மனையறத்தின்
வையம் போற்று மாண்புடையார்
வழுத்து சீல முளரென்றுஞ்
சைவ நலமே பொருளாகச்
சார்வா ரெனச்சேக் கிழார்பரவுந்
தெய்வ நீல கண்டாபணி
தேவே யெளவ நேசநம. அஉ

தீய நெறிசே ணிடையுமுறுத்
திறலர் நீல கண்டத்தி
ஞய பேரன் பொருபொழுது
மசைவி லாரென் பனவாதி
தூய மகிமை சேக்கிழார்
துலங்க விதந்து துதிக்குநல
மேய நீல கண்டரையாள்
விமல யெளவ நேசநம. அந

இன்பத் துறையி லெளியரா
யினரென் சேக்கி ழார்கருத்தவ்
வின்பத் துறைமுற் றொழித்துடன்*சா
ரியல்பு விளக்கு நயமலது
முன்பற் றுளதேன் மனையாளை
மொழிகேட் டலுநீங் காதுவர
வென்பொற் பிலக்கு நீலகண்ட
ரிறைஞ்சு யௌவ நேசநம. அச

அங்கோர் பாத்தை பாலணைந்தென்
றருளிற் றிருளிற் பெருமழையிற்
றங்கோ ரிடஞ்ச் சார்ந்தணைந்த
தகைமை யலது சேணினுந்தீங்
கிங்கார் கிலரென் பஃதாதிக்
கிழுக்கா யிசைத்தன் றென்றறிஞர்
நன்கோர் நீல கண்டர்தொழு
நாத யௌவ நேசநம. அரு

ஓடு கொடுத்த திப்பவஞ்சத்
துறவு மனைமு னெவற்றையுமிவ்
வோடு போற்பற் றொழித்தாங்
குனையே பற்றி யுறல்விளக்கி
நாடு தீக்கை முறைகளிலோர்
கலனே யெனவான் றோருரைசீர்
கூடு நீல கண்டர்பணி
கோவே யௌவ நேசநம. அசு

உடனு யிருந்துங் காமமனு
வுஞ்சா ராம லுனைப்போலத்
திடனு யமர்ந்து மெய்யடியார்
சிவனே யெனுநூல் வாய்மைபுலப்

---

* உடன்—மனைவியாருடன்

படனேர் விளக்கி நின்னருளே
பற்று நீல கண்டர்முனம்
விடைமே லுறவந் தின்பருளு
விமல யௌவ நேசநம. அஎ

அருள்வா ரிதிதோய்த் தெண்ணிரண்டாண்
டருண்மே னியுந்தந் தனையெனமுன்
மருவா வியிற்றோய்த் தென்ஞான்று
மன்னு மிளமை வடிவளித்துத்
திருவார் நீல கண்டருக்குந்
தேவி யார்க்கு மின்பருளி
யொருவா துடன்பாங் குறக்கொண்ட
வொருவா யௌவ நேசநம. அஅ

வென்றைம் புலன்மிக் கிரெனநீ
விடைமேற் போந்து விளம்பியழைத்
தென்றும் பிரியா விளமைபெறீஇ
யிருத்திர் நம்பா லெனமனையோ
டன்றங் கருளப் பெறினவர்பா
லணுவும் பழுதொன் றுறுமோமு
னென்றும் பரும்போற் றருட்குயவ
ரிறைவ யௌவ நேசநம. அகூ

செய்ய விளக்க மிருள்சிதைத்துத்
திகழ்த்தல் கண்கூ டென்றிருமுன்
றுய்ய தீப மனுதியிரு
டொலைத்துன் சொரூபம் விளக்குணர்வுற்
றுய்ய வருள லறிகுறியென்
றோர்ந்து கணம்புல் லடிகளா
னெய்யி னியற்று பணியுவக்கு
நிமல யௌவ நேசநம. கூ0

செல்வம் பெருகுந் திருத்தொண்டு
செய்வார்க் கௌலாற் றிருவிளக்குச்
செல்வம் பெருக நின்றிருமுன்
றிகழ்த்து கணம்புல் லருக்களித்தச்
செல்வங் குறையி னுந்திறம்பார்
செயுமப் பணியென் றோர்த்திடவே
செல்வங் குறையப் புரீ இப்பினருள்
செல்வ யௌவ நேசநம கக

அறம்பற் பலசெய் நமக்குமிடி
யலக்க ணூழென் றுணராமற்
றிறம்பு மவரோர்ந் துயக்கணம்புல்
செடிசேர் சிகைத்தீ பத்தினையே
சிறந்த நெய்த்தீ பத்தினுமேற்
றிருந்து பணியாக் கொண்டேனே
விறந்த கணம்புல் லருக்களித்த
விமல யௌவ நேசநம. கஉ

அரனா லயத்தின் மயிர்கோத
லதுவும் பழுதென் றறிந்துமதை
யெரிமே வுறச்செய் கணம்புல்லர்க்
கின்ப மளித்தா யிதனாலத்
தெருள்யோ கத்தி னுச்சியின்மேற்
றிகழ்பே ரொளியே யெனக்கண்டாய்
பரனீ யெனமெ யுணர்பெரியர்
பரவு யௌவ நேசநம. கங

புலிபாம் புவமன் னியன்வசிட்டன்
பொற்பே ராசு சைமினிமுற்
பலமா தவர்வா னவரெனையோர்
பரவி நின தாள் பற்பலசிர்

நலமே வினரோர் நலனுமிலா
நாயேற் கருளி னின்புகழித்
தலமே லெவர்க்கும் புலனுமெந்
தாயே யௌவ நேசநம. ௩௪

ஆவி யடைவி னுயக்குருலிங்
காதி களும்மைத் தணையருளே
தேவி யெனநின் றினிதுய்ப்பச்
செய்தி யிவற்று முய்வில்பெரும்
பாவி பிறந்தை பலகோடி
படரூற் றலைதல் பாற்றியரு
ளோவி லனந்த சத்திமா
ஞெருநீ யௌவ நேசநம. ௩௫

தனிபே ரருளே யுடையவனீ
நாயேன் பிறந்து பிறந்தென்று
மினையா நிற்றற் கிரங்கிலையென்
றிடவு முளமஞ் சுவபிறவித்
துனிநீ பறியாய் பிறப்பிலியேற்
சுருதி சருவஞ் ஞதையுனக்கே
யினிதோ திடுந்தண் புலீச்சரம்வா
ழெந்தா யௌவ நேசநம. ௩௬

வாராய் சிறுவ வருந்தற்க
மற்றுன் கரும வலிபெரிதா
நோராய் வினைபக் குவமாதி
நேரிற் பவநீத் துய்வையெனி
லோரா வினையேற் கேதுசெய
லுடையாய் குறைவி லாற்றலைநீ
தாரா யருளே வினைதபுத்தெந்
தாயே யௌவ நேசநம. ௩௭

பவங்க டொறுஞ்செய் தீவினையாற்
படருற் றலைதி படிமுறையே
தவஞ்செய் துணர்வுற் றுய்வதலாற்
சடிதி யருளிற் றவறிலர்தோர்
நவஞ்செய் விதிகொ லென்றயிர்த்து
நவில்வ ரெனினீ சுதந்திரனே
சிவஞ்செய் பரதந் திரனன்மா
தேவ யௌவ நேசநம. ௧அ

அன்பு தரிற்பே ரின்பருள்வோ
மென்னி லலர்தோர் விலைப்பொருளன்
றின்ப வள்ளால் கைம்மாறென்
றெண்ணு யளப்பி லார்க்களித்தும்
பின்பு குறையா வரம்பில்லாப்
பேரின் புளனித் தியதிருத்த
னென்ப ருனையே யின்பருளா
யீச யௌவ நேசநம. ௧௯

பாச நீக்கி யாளுதனின்
பாலே யாகு மியல்பானே
பாச நீக்க முளைநிருப
பதத்தா லீச னெனுஞ்சுருதி
பாச பந்த சுரரெனையர்
பரிவு கொளினு மியலாதப்
பாச நீக்கி யருளுதியெம்
பரம யௌவ நேசநம ௨௦

பவமுன் சர்வே சானபசு
பதியுக் கிரருத் திரபீம
திவிய மகானென் பெயர்முறையே
திகழ்பூ முதலோ ரெட்டுருவி

லவனி மூர்த்தி மானுலகா
தாரன் கோடி யருக்கொளிதாழ்
சவியன் பவனென் றேத்துபுலீச்
சரம்வாழ் யௌவ நேசநம. ௱௧

ஆற்றன் மிகும கோததிமுன்
ஞஞ்சா ருவசா கரமயனுய்த்
தோற்று சீத மழையினரர்
சுரர்மா வாதி பயிர்முழுதும்
போற்று புவன மூர்த்தியனுய்ப்
போற்று புவன மெல்லாமுந்
தேற்று சருவ புலீச்சரம்வாழ்
தேவே யௌவ நேசநம ௱௨

பலவெங் கிரண பந்திகளாற்
பவன முழுதும் விளக்கஞ்செய்
தலைவ னுள்கோ ணிரைத்தாமன்
தலைவண் கரமென் கமலகர
னிலகு மிரவி மூர்த்திமா
னெனுமீ சான னீயெனப்போற்
றுலகுக் கொருவா புலீச்சரத்தி
லொருவா யௌவ நேசநம. ௱௩

வான மளிப்போன் மகபதிக்கு
மகஞ்செய் பவருக் கனையபலன்
மான வளிப்போன் விபத்தெவர்க்கு
மாற்று பவனு ருயிரெவைக்குங்
கோனி யமான மூர்த்தியனுய்க்
கூறும் வாய்மைப் பசுபதியாம்
ஞான தான புலீச்சரம்வாழ்
நாத யௌவ நேசநம. ௱௪

அனில விவித வகையினுயி
ரனைத்துள் வசித்துப் போற்றியருள்
புனிதன் வன்னிக் குறுதுணையாய்ப்
பொலிய விரவி விளக்குபரன்
தனித வாயு மூர்த்திமா
னென்று சாற்று முக்கிரனு
மினிய பரம புலீச்சரம்வா
ழீச யௌவ நேசநம. ௩௫

சோம சூரி யாக்கினியென்
சோதித் திரயந் திகழ்நயனன்
காம னெரியக் கனல்விழித்தோன்
கருது புவன முழுதளிப்போன்
றாம னங்கி மூர்த்தியனுய்ச்
சுருதி புகலு முருத்திரப்பேர்
நாம பரம புலீச்சரம்வாழ்
நாத யௌவ நேசநம. ௩௬

அருக்கன் முதற்கோ ளனைத்து
மமரரெவரு மலங்கலெனத்
தரிக்கு முதல்வன் முதலீறு
சாரான் சருவாண் டமுமொளியின்
வரச்செய் வடிவ நபமூர்த்தி
மானென் றோது பீமனென
வுரைக்கும் பரம புலீச்சரம்வா
ழொருவ யௌவ நேசநம. ௩௭

பயிர்க ளெவையுங் கலையமுதம்
பாப்பி விருத்தி தரப்புரிவோ
னுயர்தன் னொளியா லுலகங்க
ளொருங்கு திகழ வொளிசெய்வோன்
மயர்முற் றொளிக்கும் விதுமூர்த்தி
மானு மகானென் றருணூல்க
ளியனா லுரைக்கும் புலீச்சரம்வா
ழீச யௌவ நேசநம. ௩௮

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருப்புலீச்சரம்

# ஸ்ரீ யௌவநாம்பா பதிகம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ யௌவநாம்பா பதிகம்

## கட்டளைக் கலித்துறை

மணியின் னொளியௌவ நேசரி னீயெனும் வாய்மை நின்றும்
பிணியின் னுயிரொழிந் துய்கென் கருணையிற் பின்னையைப்போ
லெணியின் னருளுந மேயினை பூசையி லெய்தியெம்மை
யணியின் பருள்புலி யீச்சரம் வாழ்யௌவ நாம்பிகையே. ௧

தொழுவா ரவர்துய ராயின தீர்த்த லுனதொழிலென்
றெழுமாண் சுருதிசொற் றுங்குனை யேதொழு மென்னையிட
ரொழியா துடற்ற வினையா மலைவதுன் னேகருளுக்
கழகோ திருப்புலி யீச்சரம் வாழ்யௌவ நாம்பிகையே ௨

தருவா யருளினி யின்னன்முற் றேகுந் தழைக்குமின்பெண்
றுருவா திறைஞ்சுமென் வேட்கைமுற் றும லுலைதனன்றே
வருமே லெனிற்றுய ராற்றிலன் பாற்றிநல் வாழ்வுவிரைந்
தருளாய் திருப்புலி யீச்சரம் வாழ்யௌவ நாம்பிகையே. ௩

பன்னெடுங் காலங்க ணின்னடி போற்றிப் பரவுமென்னை
யின்னலொன் றோபல வாட்டுத லோர்ந்து மிரங்கிலையே
யுன்னல தேதர ணோவாத் துனிமுற் றொழித்தனைப்போற்
றந்நல மீபுலி யீச்சரம் வாழ்யௌவ நாம்பிகையே. ௪

நாரா யணனெனுங் காரணப் பேர்சிவ நாமமென்ப
தோரா தவர்க்குநின் னூரா யணிப்பெய ரோர்விக்குமேற்
றேறோர்வி லேற்குன் றிருவடி ஞானந்தெளிப்பவர்மற்
றாரோ வருள்புலி யீச்சரம் வாழ்யௌவ நாம்பிகையே. ௫

எத்தெய்வம் யார்மேற் கொளினுமங் கெய்து மிறைசிவனென்
றுத்தம நூல்சொல னேரோ விளக்கு முயிரெவைக்குஞ்
சத்தியம் பாவெனு நாமம் பிறரெவர் தாங்கவல்லா
ரத்தன் னமர்புலி யீச்சரம் வாழ்யௌவ நாம்பிகையே. ௬

இன்னல் லொருங்கொழித் தின்பருள் கென்றிறைஞ் சென்னி
தின்னருள் செய்கிலை யூழ்வலி நின்வலி யிற்பெரிதோ [டர்தீர்த்
வன்னதுன் னாணை வழிச்செலு மென்ப தநிர்தங்கொலோ
வன்னை யருள்புலி யீச்சரம் வாழ்யௌவ நாம்பிகையே. ௭

தனையரைப் போற்றனற் றாய்கட னேயத் தனையருள்ளு
நனியிட ருற்றறி வின்றுழல் வோரை நயந்தளிப்பத்
துனைவளத் தாயித் தகையிரு வேமிடைத் துன்னுமன்னே
யனைய வருள்புலி யீச்சரம் வாழ்யௌவ நாம்பிகையே. ௮

தேவன் றொருவ னவன்சிவ னேபிறர்த் தேவரென்ப
தோவுப சார மடையொரீஇத் தேவியென் றோதுநின்பேர்
சீவர்க ளேயவ ரென்றுண்மை தேற்றுத றேர்ந்தடைந்தே
னாவ தருள்புலி யீச்சரம் வாழ்யௌவ நாம்பிகையே. ௯

நாரணி யம்புய மனோன் மணி மீன நயனிபரி
பூரணி சங்கரி பார்ப்பதி யீசை புராந்தகிமா
காரணி சாம்பவி நீலிகங் காளி கௌரியுமை
யாரணி சீர்ப்புலி யீச்சரம் வாழ் யௌவ நாம்பிகையே. ௰

திருச்சிற்றம்பலம்.

பாரதி பிரஸ், மன்னார்குடி.